

பாமாலை 443 இயேசு மீட்பர் உந்தன்

1 இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில்
வாசம் பண்ண விடாயோ?
உந்தன் பாவம் சுமந்தோரை
இன்று ஏற்றுக் கொள்ளாயோ?

பல்லவி

இயேசு மகாராஜர்! இதோ
வாசல் அண்டை நிற்கிறார்!
பாவி, நீ இவ்வன்பை எண்ணி
வாசலைத் திறக்கப் பார்

2 பாவம், லோகம், ஆசாபாசம்
யாவும் இடம் பெற்றதோ
நீச சிலுவையில் மாண்ட
நேசர்க்கிடமில்லையோ?

3 இன்னுமே நீ தாமதித்தால்
பின்பு மோசம் வருமே
இப்போதே ரட்சண்ய காலம்
அப்பால் பிந்திப் போகுமே

4 அல்லேலூயா கீதம் பாட
வல்ல நாதரண்டை வா
தள்ளியே தாமதம் செய்யார்
நல்ல இயேசு நாதரே